Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

நல்லூர் ... நூலகம்
மாநகர ...
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    பங்குனி 05    [18 - 3 - 1993]    வியாழக்கிழமை    ஓசை 28

## கிரிக்கட் ரசிகர்களுக்கு காவல்துறை கோரிக்கை

யாழ். நகரப் பிரதேசத்தில் கிரிக்கட் போட்டிகள் இடம்பெறும்போது எவராவது வீதிகளில் வாகனப் போக்குவரத்துக்கோ அல்லது பொதுமக்களின் மனங்கள் புண்படக்கூடிய முறையிலோ நடந்துகொள்ள வேண்டாமென தமிழீழக் காவல் துறையினர் கேட்டுள்ளனர். இதுகுறித்து காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் விடுத்துள்ள வேண்டுகோளில், (4 ஆம் பக்கம் பார்க்க)

# கல்கத்தா நகரில் பாரிய குண்டுவெடிப்பு

## 70 பேர் பலி; 200 பேர் காயம்
## 5 மாடிக் கட்டடம் தகர்ந்தது

[கல்கத்தா]

இந்தியப் பெருநகர்களில் ஒன்றான கல்கத்தாவில் நேற்றுமுன் தினம் நள்ளிரவு இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்பில் எழுபது பேர் கொல்லப்பட்டனர். இருநூறு பேர் வரையில் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் நாற்பத்தைந்து பேர்களின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது. இக்குண்டுவெடிப்பின் போது இரு கட்டடங்கள் முற்றாகச் சேதமடைந்தன.

கல்கத்தாவின் மத்தியில் உள்ள பௌபசார் பகுதியில் இடம்பெற்ற இக்குண்டு வெடிப்பு, இந்தியாவில் கடந்த ஐந்து நாட்களில் இடம்பெற்ற இரண்டாவது பாரிய குண்டு வெடிப்புச் சம்பவமாகும். கடந்த 12 ஆம் திகதி பம்பாய் நகரில் 13 தொடர் குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்றது தெரிந்ததே.

கல்கத்தாவில் வெடித்த வெடிகுண்டு மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்கலாம் என்றும் ரிமோட்கன்ரோல் சாதனம் மூலம் இயக்கப்பட்டிருக்கலாம் என்றும் பொலீஸ் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

குண்டுவெடித்த கட்டடம் நூறு ஆண்டுகள் பழமையானது. கீழ் மாடிகளில் கடைத் தொகுதிகளும் மேல் மாடிகளில் இங்கு பணியாற்றும் பணியாளர்களின் குடும்பங்கள் வசித்துவந்ததாகவும் அமைந்திருந்தது.

குண்டுவெடித்ததும் கட்டடம் தகர்ந்துவீழ்ந்து தீப்பற்றியதாகவும் அருகிலிருந்த சில கட்டடங்களும் சேதத்திற்கு உள்ளாகின என்றும் தெரிவிக்கப்படுகின்றது இக்கட்டடத்தில் 125 முதல் 150 பேர் வரையில் சம்பவ நேரத்தில் இருந்துள்ளதால் இடிபாடுகளிலிருந்து மேலும் சடலங்கள் மீட்கப்படலாம் என சுட்டிக் காட்டப்படுகின்றது. உடனடி மீட்பு பணியில் நேற்றுக் காலை 22 தீயணைப்பு வண்டிகள் ஈடுபட்டிருந்தன.

## உள்ளூர் குற்றவாளிகள் தொடர்பு என சந்தேகம்

டில்லி)

கல்கத்தாவிலுள்ள பொலீஸ் தலைமைப் பணிமனைக்கு சுமார் அரைமைலுக்குட்பட்ட பகுதியில் வெடிகுண்டு வெடித்ததினால் அடுக்கு மாடிக்கட்டடத் தொகுதி இரண்டு தகர்த்தெறியப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் சக்திவாய்ந்த வெடிகுண்டுகள் இங்கு வெடித்ததாக நம்பப்படுகிறது. இதைத் தொடர்ந்து கல்கத்தாவில் ... கும் பம்பாய்க் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கும் தொடர்புகள் இருப்பது இதுவரை நிரூபிக்கப்படவில்லை எனவும், உள்ளூர் குற்றவாளிக் கும்பல்களுக்கும் இச் சம்பவத்துக்கும் தொடர்பிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது எனவும், இவ்வாறான கும்பல் ஒன்று குண்டு தயாரித்துக் கொண்டிருந்த சமயம் இச் சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

## விபத்தில் வீரச்சாவு




### மேஜர் சேகர்

யாழ். மாவட்டத்தில் 14-3-93 அன்று பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில் ஏற்பட்ட விபத்தொன்றில் மேஜர் சேகர் (சுப்பிரமணியம் ரூபச்சந்திரன் கற்சிலைமடு, ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு)வீரச்சாவுஅடைந்தார்.

இவர் வெடிவிபத்தில் வீரச்சாவடைந்ததாக நேற்றுவெளிவந்த செய்தி தவறானதாகும்.

இவர் 1988ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இயக்கத்தில் இணைந்தவர். பயிற்சிகளை முடித்தபின் இந்திய இராணுவத்துடனான பல மோதல்களில் திறமையாகச் செயற்பட்டவர். இந்திய இராணுவத்தினர், தமிழ் மண்ணிலிருந்து வெளியேறிய சில மாதங்களின் பின்னர் தொடங்கிய இரண்டாவது ஈழப் போரின் ஆரம்பத்தில் நிகழ்ந்த கொண்டச்சி, கொக்காவில் முகாம் தகர்ப்புகளிலும், [4 ஆம் பக்கம் பார்க்க]

### வீரச்சாவு



# வடமராட்சி கிழக்கில் விமான குண்டுவீச்சு

## ஒருவர் காயம்; வீடுகள் பல நாசம்

(வடமராட்சி)

வடமராட்சி தாளையடிப் பகுதியில் சிறிலங்கா விமானப்படை நடத்திய பலத்த குண்டுவீச்சு தாக்குதலில் ஒருவர் காயம் அடைந்தார். நான்கு வீடுகள் சேதமடைந்தன.

நேற்று முன்தினம் மாலை ஐந்து மணியளவில் நடைபெற்ற இக்குண்டுவீச்சுத் தாக்குதலில் இரண்டு விமானப் படை விமானங்கள் பங்குபற்றின. ஆனையிறவுப் பக்கமாக இருந்து வந்த விமானங்கள் எதிர்பாராத வேளையில் திடீரென மாறிமாறி குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை நேற்று முன் தினம் மாலை 4 மணியளவில் ஆனையிறவு, கட்டைக்காடு சிறிலங்கா இராணுவ முகாம்களைச் சூழவுள்ள பகுதிகளில் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள், அவ்ரோ விமானமொன்றுமற்றும் உலங்கு வானூர்திகள் இடைவிடாது தாக்குதல்கள் நடத்தியமை தெரிந்ததே.

# விடத்தல்தீவுகுடியிருப்புமீது விமானங்கள் தாக்குதல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நேற்றையதினம் பலத்த குண்டு வீச்சுத்தாக்குதலை நடத்தின.

நேற்றுக்காலை 10.45 மணியளவில் இக் குண்டு வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றது. மன்னார் மாவட்டத்தில் உள்ள விடத்தல்தீவில் மக்கள் குடியிருப்புக்கள் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரு குண்டு வீச்சு விமானங்கள் நான்கு குண்டுகளை வீசின. ஆனால், இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை இக்குண்டு வீச்சால் ஏற்பட்ட சேதவிபரம் கிடைக்கவில்லை.

## கடற்படை ரோந்து வடமராட்சியில் அதிகரிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு-கிழக்கு கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் ரோந்து நேற்று முன்தினம் இரவு அதிகரித்திருந்ததாக கரையோரப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, ஆழியவளை, செம்பியன்பற்று கடற்பகுதிகளில் பேரிரைச்சலுடன் கடற்படையினரின் ரோந்துச் சேவை நடைபெற்றதாகவும், இரவு முழுவதும் ...

நூறு ஆண்டுகள் பழமையானது. கீழ் மாடிகளில் கடைத்தொகுதிகளும் மேல் மாடிகளில் இங்கு பணியாற்றும் பணியாளர்களின் குடும்பங்கள் வசித்துவந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கல்கத்தா நகர பொலீஸ் தலைமையகத்திலிருந்து இக்கட்டடம் அரைமைல் தொலைவிலேயே ண்டு தகர்த்தெறியப்பட்டுள்ளதுஎன தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் சக்திவாய்ந்த வெடிகுண்டுகள் இங்கு வெடித்ததாக நம்பப்படுகிறது. இதைத் தொடர்ந்து கல்கத்தாவில் பொலீஸ் பிரிவுகள் அனைத்தும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், இக்குண்டு வெடிப்புச் சம்பவத்துக் எனச் சந்தேகிக்கப்படுகிறது எனவும், இவ்வாறான கும்பல் ஒன்று குண்டு தயாரித்துக் கொண்டிருந்த சமயம் இச்சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இச்சம்பவத்திற்கும் மத சார்பு நெருக்கடிகளுக்குமிடையில் எவ்வித தொடர்புகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஏனைய இடங்களிலும் குண்டு வெடிக்கலாம்

**- பி. பி. சி. ஊகம்**

(டில்லி)

''இந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் குண்டுகள் வெடிக்கும் என்பதற்கு கல்கத்தா குண்டு வெடிப்புச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது'' இவ்வாறு இந்தியாவில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவங்கள் குறித்து பி. பி. சி. விமர்சனம் செய்துள்ளது.

இக்குண்டு வெடிப்புக்களுக்கு காரணம் யார்? ஏன் வைத்தார்கள்? எப்படி வைத்தார்கள்? என்ற விடயங்கள் எல்லாம் மர்மமாகவே உள்ளது. எனினும் இக்குண்டுகளின் இலக்கு இந்தியாவின் பங்குச் சந்தையும், வர்த்தக மையமுமே என்பது தெளிவாகத் தெரிகிறது. இக் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் குறித்து இதுவரை ஊகங்கள் மட்டுமே எழுந்துள்ளன. எனினும் இச்சம்பவங்களின் பின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மத்திய அமைச்சர்கள் கல்கத்தாவிற்கு விரைவு

(டில்லி)

கல்கத்தாவில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற குண்டுவெடிப்பைத் தொடர்ந்து இந்திய மத்திய அரசின் உள்துறை இணையமைச்சர் ராஜேஷ் பைலட், அமைச்சர் அஜித்குமார் பாஞ்சா, இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சோம்நாத் சட்டர்ஜி ஆகியோர் நேற்றுக் கல்கத்தாவிற்கு விஜயமொன்றை மேற்கொண்டனர்.

மாநிலமுதலமைச்சர் ஜோதி பாசுவைச் சந்தித்த இவர்கள் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக ஆழ்ந்த கவலையை வெளியிட்டதுடன், சம்பவம் நடந்த இடத்தையும் சென்று பார்வையிட்டனர்.

## கல்கத்தா குண்டு வெடிப்பு; ஜோதி பாசு அதிர்ச்சி

(டில்லி)

கல்கத்தாவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவங்கள் தொடர்பாக அம்மாநில முதலமைச்சர் ஜோதிபாசு ஆழ்ந்த அதிர்ச்சியை தெரிவித்துள்ளார். நேற்றுக் கல்கத்தாவில் சட்ட மன்றக் கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில், இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக இருவர் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். குண்டு வெடிப்பு சம்பவததில் உயிரிழந்தவர்களுக்காக சட்ட மன்றக் கூட்டத்தின் ஆரம்பத்தில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## தமிழ்நாட்டில் தீவிர பாதுகாப்பு

(சென்னை)

பம்பாயிலும், கல்கத்தாவிலும் நிகழ்ந்த குண்டு வெடிப்பு சம்பவங்களுக்குப் பின்னர் தமிழ் நாட்டிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

நேற்று சென்னையில் உயர் அதிகாரிகளுடன் சட்டம் ஒழுங்கு நிலைமை பற்றிக் கலந்துரையாடல் நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதிகளிலும் மத்திய மாநில அரசுக் கட்டடங்களிலும், அடுக்கு மாடிக் கட்டடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

## வீரச்சாவு



லெப்டினன்ட் நாயகி (மங்கையற்கரசி)

15-03 1993 அன்று அளவெட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான திடீர் மோதலில் லெப்டினன்ட் நாயகி / மங்கையற்கரசி (வீரமலை ராஜலட்சுமி, புதுமுறிப்பு கிளிநொச்சி) வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## வேவு விமானம் நோட்டம்

(சுன்னாகம்)

நேற்றுக் காலை 10 மணியளவில் வேவு விமானமொன்று வலிவடக்கு, அச்சுவேலி, இடைக்காடடுப் பகுதிகளில் பல தடவை வட்டமிட்டு சென்றது. (11)

## இன்று தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்ட தபால் பொதிகள் குடாநாட்டில் இன்று முதல் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 760 பொதிகளினுள் வைக்கப்பட்ட நிலையில் மேலும் 404 பொதிகள் உட்பட மொத்தம் 1164 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டதாக தெரியவருகிறது.

உள்ள விடத்தல்தீவில் மக்கள் குடியிருப்புக்கள் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரு குண்டு

வடமராட்சி வடக்கு-கிழக்கு கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் ரோந்து நேற்று முன்தினம் இரவு அதிகரித்திருந்ததாக கரையோரப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

டித்துறை, பருத்தித்துறை, ஆழியவளை, செம்பியன்பற்று கடற்பகுதிகளில் பேரிரைச்சலுடன் கடற்படையினரின் ரோந்துச் சேவை நடைபெற்றதாகவும், இரவு முழுவதும் கடற்படைப் படகுகள் கரையை நோக்கி வருவதும் பின்னர் திரும்பிச்செல்வதுமாக கடற்படை நடமாட்டம் இருந்ததாக அம்மக்கள் தெரிவித்தனர்.

சிறிலங்கா கடற்படையினரின் இத்தகைய நடவடிக்கையினால் நேற்று முன்தினம் இரவு மீனவர்கள் கடலுக்குச் செல்லமுடியவில்லை. [யோ)

## தமிழ் பயணிகள் மீது கட்டுநாயக்காவில் கெடுபிடி

(வடமராட்சி)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பணிபுரியும் தமிழ் உத்தியோகத்தர்கள் மற்றும் பயணிகள் மீது இரகசியப் பொலீஸாரின் சோதனைகள் தீவிரமடைந்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விமான நிலையத்தில் பணிபுரிகின்ற உத்தியோகத்தர்கள் ஒரு பிரிவில இருந்து அடுத்த பிரிவுகளுக்கு செல்வது தடை செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு தமிழ் பயணியைச் சோதனை செய்ய இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் நேரம் எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

தமிழ் பயணிகளின் பொதிகள், விசாக்கள் சோதனை செய்யும் போது சந்தேகத்திற்குரியவர்கள் அவ்விடத்திலேயே வைத்து பொலீசாரால் கைது செய்யப்படுவதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன. முன்னர் போலன்றி தற்போது கெடுபடி நிலை அதிகரித்திருக்கிறது. (யோ)

## 1500 மெ. தொன் அரிசியுடன் 'வாதுவ' வந்தடைந்தது

(வடமராட்சி)

'வாதுவ' கபபல நேற்று காலை 5.30 மணிக்கு பருத்தித்துறை இறங்குதுறைக்கு வந்து சேர்ந்தது.

இக் கப்பலில் மா 1900 மெட்றிக் தொன், அரிசி, 1500 மெட்றிக் தொன், சீனி 300 மெட்றிக் தொன், பருப்பு 200 மெட்றிக் தொன், மாட்டுத்தீன் 338 மெட்றிக் தொன், சவர்க்காரம் 20.655 மெட்றிக் தொன், தேங்காய் எண்ணெய் 98பரல்கள், மண்ணெண்ணெய் 415 பரல்கள், டீசல் 35 பரல்கள், தபால் பொதிகள் 1164 மற்றும் யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவாளர் சங்க சமாசத்திற்கு 50 பைக்கற் நெசவு நூல், சாயம் 1 பெட்டி, புடைவைச்சோடா 10 பைக்கற்றும் எடுத்துவரப்பட்டிருக்கின்றன.

யாழ் புனர்வாழ்வு திட்டமிடல் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் கப்பலுக்குச் சென்று பொருள்களைப் பாரமெடுத்ததையடுத்து உடனேயே பொருள்கள் இறக்கும் வேலைகள் ஆரம்பமாகின. (யோ)

## அரசியல் தீர்வுகாண அரசு முன்வரவேண்டும்

### இந்துமத குருமார் ஒன்றியம் மகஜர்

சிறிலங்கா அரசினால் யாழ். குடாநாட்டு மக்கள் மீது தேவையற்றவிதத்தில் திணிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வரும் இராணுவ அட்டூழியங்களை உடன் நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணக்கமான தீர்வொன்றைக் காண முன்வருமாறு கோரி யாழ்ப்பாணத்தில் இயங்கும் இந்துமத குருமார் ஒன்றியம் சிறிலங்கா ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா அவர்களுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இந்துமதக் குருமார் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் சிவஸ்ரீ. வை. கருணாகரேஸ்வரக் குருக்கள் அவர்களினால் ஒப்பமிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இம் மகஜரில் மக்கள் போக்குவரத்துக்காக பூநகரி இராணுவ முகாமை அகற்றி பூநகரி சங்குப்பிட்டி பாதையை திறந்து விடுமாறும், பொருளாதார நெருக்கடியில் வாழும் யாழ். குடாநாட்டு மக்களுக்கு போதியளவு உணவுப் பொருள்களை அனுப்பிவைக்குமாறும், அத்தியாவசிய மருந்து வகைகளை அனுப்பிவைக்குமாறும், வரலாற்றுப் பெருமைமிக்க திருக்கேதீஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசாமிகோவில், கீரிமலை நகுலேஸ்வரம் ஆகிய புனித இடங்களில் அமைந்திருக்கும் இராணுவ முகாம்களை அகற்றி மக்கள் சுதந்திரமாக வழிபாடு செய்ய அனுமதிக்குமாறு கோரும் கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளது. (17)

## வங்கியாளர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் இவ்வாண்டுக்கான பரீட்சை எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ளது என தெரியவருகிறது இப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி இம் மாதம் 31 ஆம் திகதியாகும் இத் திகதி எக்காரணம் கொண்டும் நீடிக்கப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**மீண்டும் இயங்குகிறது**

6-2-93 முதல்மீண்டும்இயங்குகின்றது சோதிட விலாச புத்தகசாலை 46, பெரிய கடை யாழ்ப்பாணம். எம்மிடம்சமய நூல்கள், விஞ்ஞான புத்தகங்கள் சோதிட, வைத்திய நூல்கள்,பாடசாலைப் புத்தகங்கள் உபகரணங்கள், ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகின்றன. சோதிடப்பிரகாசயந்திரசாலை கொக்குவில். (4463)

**"போர் முரசம் கேட்கிறது"**

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் 'போர் முரசம் கேட்கிறது' ஒரு யதார்த்த நாடகம் REALISTIC PLAY இன்று மாலை 3 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரியில் யில் மேடையேறுகின்றது. பார்த்து மகிழுங்கள். அவரது நூல்கள்: 1. பொலிடோலே கதி, 2 பணமோ பணம், 3. கெட்டிக்காரரர்கள், 4. முதலாம்பிள்ளை. 30/- (4487)

**தவறிவிட்டது**

வல்வெட்டித்துறை- பொலிகண்டி வீதியில் சில பொருள்களுடன் கறுப்பு நிறமுடைய பாக் 16- 03- 93 அன்றிரவு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். கந்தையா பாலன், மயிலகம்,மூளாய் வீதி வட்டுக்கோட்டை. [4496]

**பாலராசிரியராக**

பாலராசிரியராக வர க. பொ. த.(சா/தா.) சித்தியடைந்தவர்கள் தபால் வழியிலும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நேரிலும் பயிற்சி பெறலாம். விபரங்களுக்கு வரும் சனிக்கிழமை முற்பகல் 10-00மணிக்கு சந்தித்தும் ஆவனசெய்யலாம். பாலா ஆசிரியர் சங்கம், 73 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (4502)

**உடன் உதவுக**

பேரன்புடையீர்!
கவிச்சக்கரவர்த்தி
கம்பன் எழுதிய
மும்மணிக்கோவை

எனும் நூல் பதிப்புக்காக அவசரமாகத் தேவைப்படுகின்றது. அந்நூலை வைத்திருப்பவர் யாராயினும் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டிக்

## வர்த்தக திணைக்களத்தில் பாவனைக்கு உதவாத மா

வர்த்தகத் திணைக்களக் கிளைகளில் மனிதப் பாவனைக்கு உதவாத மா விற்பனையாகின்றது. செஞ்சிலுவைச் சங்கக் களஞ்சியத்திலிருந்தே வர்த்தகத் திணைக்களம் மாவைக் கொள்வனவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

செஞ்சிலுவைச்சங்கக் களஞ்சியத்தில் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த மா விற்பனைக்கு வந்த போது, அதனைப் பார்வையிட்ட இரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மா பாவனைக்கு உதவாது என்று கைகழுவி விட்டபிறகே இந்த மாவை வர்த்தகத் திணைக்களம் கொள்வனவு செய்து விற்கின்றது.

குடும்ப அட்டை ஒன்றுக்கு 3 கிலோ பழுதடைந்த மாவுடன் 5 கிலோ அரிசி, ஒரு கிலோ பயறு மற்றும் ஒரு கிலோ பருப்பும் வழங்கப்படுகிறது. இந்த நான்கு பொருள்களையும் தனித்தோ பிரித்தோ பாவனையாளர் வாங்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஏப்ரலில் வேலைநிறுத்தம் தொழிற்சங்கங்கள் முடிவு

பெருந்தோட்டத்துறையில் தற்போது நிலவும் நெருக்கடி நிலைமையை ஆட்சேபித்துஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என கடந்தவாரம் கொழும்பில் கூடிய பெருந்தோட்ட தொழிற்சங்கங்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

வேலை நிறுத்தத்தை ஏப்ரல் மாத இறுதிப்பகுதியில் செய்ய ஏற்பாடு செய்வதெனவும்' இது தொடர்பாக மலையகத்தின் அனைத்து பகுதிகளிலும் கூட்டங்கள் நடத்தியும் துண்டு பிரசுரங்கள் விநியோகித்தும் பிரசாரம் செய்வதெனவும் இங்கு முடிவு செய்யப்பட்டது.

## மக்களற்ற பகுதியில் பிரதேச செயலகம்!

வவுனியாவில் மக்கள்எவரும் அற்ற செட்டிகுளம் பிரதேசத்தில், பிரதேசசபை செயலகம் ஒன்று செயல்பட வைக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் புதிய சிங்களக் குடியேற்றத் திட்ட வாசிகளுக்கு வசதியாகவே இந்த பிரதேச செயலகம் செயற்பட வைக்கப்பட்டுள்ளது.

தவிர, அச்சம் காரணமாக சிங்கள மக்கள் குடியேற்ற பகுதியை விட்டு ஓட்டம் பிடிக்காமல் இருக்கும் நோக்குடன் சமீபத்தில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு காவல், கண்காணிப்பு அரண்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து திரும்பி வந்துள்ள சில அகதி மக்களைத் தவிர வேறு தமிழ் மக்கள் செட்டிகுளம் பிரதேசத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## 45-ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
7 — 11 — 1972



வீரச்சாவு
2 — 02 — 1993

2-ம லெப்டினன்ட்

**மதிச்செல்வன் / லெனின்**

(சண்முகலிங்கம் நிமலேஸ்கரன்)

காரிருளை நீக்கி ஒரு கனலாய் எழுந்தாய்

### வடக்கு கிழக்கு பகுதியில்

# சர்வோதய பணிகள் நிறுத்தம் அரசின் கெடுபிடியே காரணம்

**சர்வோதயத் தலைவர் தெரிவிப்பு**

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதியில் சர்வோதய இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்த நிவாரணப்பணிகள் நிறுத்தப்படுவதற்கு அரசாங்கம் அந்த இயக்கத்தின் மீது மேற்கொண்டுவரும் கெடுபிடிகளே காரணம் ஆகும் என்று சர்வோதய தலைவர் டாக்டர் ஏ. ரி. ஆரியரத்தினா தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றில் பேசிய ஆரியரத்தினா,யுத்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு கிழக்கு பகுதியில் நிவாரணப் பணியில் ஈடுபடுவதற்காக வெளிநாடுகளில் இருந்து கிடைத்த பணத்தை அரசாங்கம் முடக்கி இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், ஜேர்மன் நாட்டிலிருந்து ஏழு மில்லியன் டொச் மார்க் உதவி சர்வோதயவிற்கு ஒதுக்கப்பட்டிருந்ததாகவும் அதனை அரசாங்கம் முடக்கியதாகவும் தெரிவித்ததுடன், அப் பணம் வேறு இருபது அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். சர்வோதயாவிற்கு ஜனசவிய நம்பிக்கை நிதியத்திலிருந்தும் நிதி ஒதுக்கப்படுவதில்லை என்றும் இதுஒருபாகுபாடான நடவடிக்கையே என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் சர்வோதயாவிற்கு எதிரான அரசின் கெடுபிடி நடவடிக்கைகளைக் கண்டித்து நேரடியாக அறவழிப் போராட்டங்கள் விரைவில் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும், இத்தைகய நடவடிக்கை மூலம் அரசு மேற்கொள்ளும் நாசகார நடவடிக்கைகளையும், சட்டத் துஷ்பிரயோகங்களுக்கும் எதிராக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தப்போவதாகவும் குறிப்பிட்டார்.

எனினும் எந்தவொரு அரசியல் கட்சியுடனும் இணைந்து கொள்ளப் போவதில்லை எனவும், மக்களை அரசியல் மயப்படுத்தவும், மக்களுக்கு அதிகாரம் கிடைக்கச் செய்வதும் தமது நோக்கமாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**அன்பளிப்பு**

அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு உடுப்புகளும் அப்பியாசக் கொப்பிகள் பென்சில்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன. (யோ)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

1. **அறிவித்தல்:** எதிர்வரும் முதலாந் தவணை விடுமுறைக் காலங்களில் மட்டும் 93-ம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எடுக்கவுள்ள மாணவர்களுக்கு திங்கள், புதன் வெள்ளி ஆகிய நாட்களில் மேலதிக வகுப்பு வைக்க விரும்பும் கல்வி நிறுவனங்கள் பாட ரீதியான நேரஅட்டவணையுடன் அந்த அந்தக் கோட்ட நிர்வாகத்திடம் முன்னரே அனுமதி பெற்றுக் கொள்ளவும். அனுமதி கோரும் கடிதம், நேர அட்டவணை ஆகியவற்றின் இரு பிரதிகள் சமர்ப்பிக்கவும்.
2. **பெண் இலிகிதர்கள் தேவை:**
   (i) யாழ். மாவட்ட செயலகம்
   (ii) யாழ். கல்விக் கோட்ட செயலகம்

மேலுள்ள எமது செயலகங்களில் கடமை புரிய க.பொ. த. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. சம்பளம் நேரில் தெரிவிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதி: 23-3-93 நேரடியாகவோ, கடித மூலமாகவோ சொந்தக் கையெழுத்தில் எழுதி விண்ணப்பிக்கவும்.

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்

19, செம்மணி வீதி,
(கல்வித் திணைக்களத்துக்கருகாமை)
நல்லூர். (சி/6216)

## 1-வது பிறந்தநாள் வாழ்த்து

### உபகரணம் அன்பளிப்பு

மந்திகை அரசினர் வைத்தியசாலை, புனர்வாழ்வுப் பிரிவின் நோயாளர்களின் நன்மை கருதி சுமார் ஐந்நூறு ரூபா பெறுமதியான உபகரணம் ஒன்றை பிரெஞ்சுவைத்தியக் குழுவில் முன்பு கடமை புரிந்த வைத்திய நிபுணர் திரு. மைக்கல் அன்பளிப்பாக கொடுத்து அனுப்பியுள்ளார். தற்பொழுது தனது தாய் நாட்டில் இருக்கும், நிபுணர் இன்னும் பல உபகரணங்களை வழங்க உள்ளார்.

### சைக்கிள் திருட்டு

[தொல்புரம்]

தொல்புரம் மடத்துச் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த க. மகாலிங்கம்(வயது 22) என்பவரினது றலி சயிக்கிள் கடந்த ஞாயிறு அன்று மூளாய் செம்பாட்டான் தோட்டத்தில்வைத்துக் களவாடப்பட்டுள்ளது. இச் சம்பவம் பற்றிக் காவல் துறையினரிடம் புகாரிட்டுள்ளதாகத் தெரியவருகிறது. [41]

## விறகு கொள்வனவு கூறு விலை

வலிகாமம் கொத்தணியின் கீழ் இயங்கும் சங்கானை வடிசாலைக்கு மொத்தமாக விறகு விநியோகிக்கக் கூடியவர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.

கூறுவிலைக்கான விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு எதிர்வரும் 22-03-93ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11-30 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட திகதியில் பி. ப. 12-30 மணிக்குக் கேள்விப் பத்திரங்கள் விண்ணப்பதாரர் முன்னிலையில் உடைக்கப்பட்டு விநியோகஸ்தர் தெரிவு செய்யப்படுவார்.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:**

பொது முகாமையாளர்,
பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்
சங்கங்களின் கொத்தணி,
பிரதான வீதி,
சங்கானை.

- பொது முகாமையாளர்

(சி/6217)

## பொதுக் கூட்டம்

சாவகச்சேரி கோவில் குடியிருப்பு சந்தன முதலிச்சி புலம் ஸ்ரீநடராச முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையின் உபவிதி (யாப்பு) அங்கீகரிக்கும் பொதுச் சபைக் கூட்டம் நாளை 19- 3- 1993 வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு மேற்படி கோவில் மண்டபத்தில் நடைபெறும் சமயப் பெரியார்கள் சிறப்புசொற்பொழிவாற்றுவார்கள். பொதுச்சபை பிரதிநிதிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அவசரமாகத் தேவைப்படு
கின்றது. அந்நூலை வைத்
திருப்பவர் யாராயினும்
உடன் எம்முடன் தொடர்பு
கொள்ளுமாறு வேண்டிக்
கொள்கிறோம்.

நன்றி!

க. குமாரதாசன்
செயலாளர்,
கம்பன் கழகம்.

[சி-6215]

## மதிச்செல்வன் / லெனின்

(சண்முகலிங்கம் நிமலேஸ்கரன்)

காரிருளை நீக்கி ஒரு கனலாய் எழுந்தாய்
ஓரினத்தின் விடிவுக்காய் செருக்களம் புகுந்தாய்
புலியானாய் - பெரும் புயலானாய்
புவிமீதில் அழியாத புகழானாய்

இலங்கைநாயகி அம்மன் கோவிலடி,
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.

குடும்பத்தினர்

(4501)

# முதலாம் வருட நினைவாக...

வெந்தவர்கள் நாங்களல்லோ விழிதெரியாதழுகின்றோம்.



**மலர்வு:** 27- 5- 1969

**உதிர்வு:** 18- 3- 1992

## செல்வி சிவநாதன் தர்மவாணி [அமுதா]

[கலைப்பீட மாணவி, யாழ்பல்கலைக்கழகம்]

தந்தை தாய் கற்பனைகள் தணலாகிப் போனதுவோ!
சொந்தமென்று வந்தவாழ்வு தூரத்தே நின்றதுவோ!
வந்த அந்த முதல் ஆண்டில் வசந்தமே ஏன்பிரிந்தாய்?
வெந்தவர்கள் நாங்களல்லோ விழிதெரியா தழுகின்றோம்.

சிந்தை வைத்த கல்வியதில் சிறந்திட நீவந்தாய்
முந்திவந்த விதியது முறைத்திட நீவெந்தாய்
பந்தபாசம் அத்தனையும் பகிர்ந்திங்கு தந்தாய்
எந்தவிதி வந்துன்னை எரியாக்கிப் போனதுவோ

நந்துகளும், நாரைகளும் உன்பிரிவைப் பாடாதோ
சந்துகளும், சாலைகளும் உன்நினைவில் வாடாதோ
வெந்து வந்தயமன் வெறிநாயாய் வந்தானோ
சொந்தவீடு பற்றிவிட்டாய் ஒளிச் சோதிவாணி ஆகிவிட்டாய்.

2-ம் வருட மாணவர்கள்,
கலைப்பீடம், யாழ்பல்கலைக்கழகம்.

[4500]

# 1-வது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் கௌவுசன்

சங்கத்தானை சாவகச்சேரியைச் சேர்ந்த றஞ்சன் சுதாஜினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கௌவுசிகாதரன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று 18. 03. 93 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் குதுகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அன்ராமார், அருமை மாமா (சுவிஸ்), அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார், சித்தப்பா, நல்லூர் பிரபா மாமா, கொழும்புப்பாட்டி, பாட்டன், அக்காமார், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

சங்கத்தானை
சாவகச்சேரி.

(4472)

- குடும்பத்தினர்

மணிக்கு மேற்படி கோவில் மண்டபத்தில் நடைபெறும் சமயப் பெரியார்கள் சிறப்புசொற்பொழிவாற்றுவார்கள். பொதுச்சபை பிரதிநிதிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

| தலைவர் | செயலாளர் |
|---|---|
| க. துரைராசா | தா. இராசநாயகம் |

[3385]

## நினைவு கூருகின்றோம்...

**1993-03-18**

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை - கல்முனைப் பகுதியில் முகமூடி நபரால் இனங்காட்டப்பட்ட நிலையில் சிறிலங்கா காவல்துறையினருடன் ஏற்பட்ட சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**வில்வம்** [முத்துலிங்கம் கருணாநிதி - வன்னியர் வீதி, கல்முனை-02 - அம்பாறை]

1991 ஆம் ஆண்டு தாவளம்பிட்டியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மிதிவெடி விபத்தில் எமை பிரிந்த -

**மேஜர் ராஜித்** (செ. கணேசன் - சித்தாண்டி - மட்டு.)

முல்லைத்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கவி** (வேலாயுதம் பிரபாகரன் – புன்னைநீராவியடி, விசுவமடு - முல்லைத்தீவு)

**கப்டன் மித்திரன்** (கந்தசாமி சிறீக்குமார் - அம்மன் வீதி, கந்தர்மடம் - யாழ்.)

1992 ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினர் 2 ஆவது நாளாக மேற்கொண்ட 'ஒப்பரேசன் கஜபார' நடவடிக்கையின்போது ஏற்பட்ட விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ஆண்டாள்** (யோகேஸ்வரி கந்தையா - புதுக்குளம் - வவுனியா)

மேற்படி சமரில் வீரச்சாவெய்திய -

**பவளராசன்-பவளம்** (இரத்தினம் ஞானம் -புனித யூட்ஸ் வீதி, பேசாலை - மன்னார்)

மட்டு - ஆற்றைப்பற்றில் தனியார் பஸ் மீது முஸ்லிம் ஊர்காவல் படையினர் கைக்குண்டு வீசியதில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6213)

நல்லூர் இனொ நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

நாட்டுக்கு நல்லதுரை வந்தாலும்
தோட்டிக்குப் புல்சுமை போகாது.
— தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 18- 03- 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

## மாகாணசபை தேர்தல்

சிறிலங்காவில் இயங்கி வந்த ஏழு மாகாண சபைகளும் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கலைக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம் மாகாண சபைத் தேர்தலுக்குரிய அடுத்த திகதி அறிவிக்கப்படாது விட்டாலும் மூன்று மாதகாலத்திற்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

மாகாண சபையை பிரேமதாசா அரசாங்கம் கலைத்தமை புதிய விடயம் அல்ல. கடந்த நவம்பரில் பஜெட் தயாரிக்கப்பட்டபோதே இவ்வருடம் ஒரு தேர்தல் ஆண்டாக அமையப்போகின்றது என அரசியல் விமர்சகர்களினால் எதிர்வு கூறப்பட்டது. அத்தோடு, மாகாணசபைகளின் ஆயுட் காலமும் முடிவடைகின்றமையால், மாகாண சபை கலைக்கப்பட்டமை ஒன்றும் அரசியல் அதிர்ச்சி தரக்கூடிய செய்தியுமல்ல.

ஆனால், இம் மாகாணசபைக் கலைப்பும் அதைத் தொடர்ந்து நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் தேர்தலும் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு ஒரு போட்டிப் பரீட்சையானாலும், எதிர்கால அரசியலை திறம்படக் கணிப்பதற்கும் திட்டமிடுவதற்கும் அது பேருதவியாக இருக்கும் என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை.

1987ஆம் ஆண்டு இந்திய-சிறிலங்கா உடன்படிக்கை மூலம் மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. ஆனால் மாகாணசபைகள் உருவாக்கப்பட்டதின் நோக்கம் தமிழர் - பிரச்சினைக்கான தீர்வு— முற்றுமுழுதாக தோல்வி கண்டுவிட்டதாயினும், இன்று தென்னிலங்கை அரசியலில் அது குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது.

இதேவேளை மாகாணசபைகளுக்கு நடந்த முதலாவதுதேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி போட்டியிடவில்லை. இதனால், பெரும் எதிர்ப்புக்கள் எதுவுமின்றி ஐக்கியதேசியக்கட்சி வெற்றியீட்ட முடிந்தது. ஆனால், தற்பொழுது எதிர் கூட்டணியினர் தேர்தலில் போட்டியிட முன்வந்தமை ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு சில சங்கடங்களை ஏற்படுத்தும் என்பதில் கேள்விக்கிடமில்லை.

மேலும், சிறிலங்கா ஜனாதிபதிக்கு பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பு

## விளையாட்டு

யாழ் மத்திய கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் 89-வது ஆண்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி நாளை வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

யாழ். மத்திய கல்லூரி இவ்வருடம் விளையாடிய கிரிக்கெட் போட்டிகளில் இது வரைக்கும் தோல்வி காணாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

போட்டி இரு நாட்களிலும் காலை 9.30 மணிதொடக்கம் மாலை 5.40 மணிவரை இடம்பெறும்.

சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற 19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் போட்டியில் சென்ஜோன்ஸ் கல்லூரி சென்பற்றிக்ஸ் கல்லூரியை 8 விக்கெட்டுகளால் தோற்கடித்தது.

சென்பற்றிக்ஸ் கல்லூரி முதலாவது இன்னிங்சில் 62 ஓட்டங்களையும், இரண்டாம் இன்னிங்சில் 59 ஓட்டங்களை மாத்திரம்பெற்றது. சென்ஜோன்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய பஞ்சலிங்கம் காண்டீபன் இப்போட்டியில் 48 ஓட்டங்களை கொடுத்து 12 விக்கெட்டுகளை கைப்பற்றி ஒரு சாதனையை நிலைநாட்டினார்.

சென் ஜோன்ஸ் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் மொத்தம் 84 ஓட்டங்களைப் பெற்றது. சென் ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெறுவதற்கு 38 ஓட்டங்களை பெறுவதற்கு பணிக்கப்பட்டது. இந்த 38 ஓட்டங்களை 2 விக்கெட் நஷ்டத்திற்கு பெற்றது. (42)

யாழ்.சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் கல்லூரி அதிபர் திரு. கா. சந்திரபாலன் தலைமையில் நடைபெற்றது.

இவ்விளையாட்டுப் போட்டியில் கனகரத்தினம் இல்லம் முதலாம் இடத்தையும், செல்லப்பா இல்லம் இரண்டாம் இடத்தையும், விலோபி இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

வரணி கரம்பை குறிச்சி கனிஷ்ட இடைநிலை வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு. த. குமாரசாமி தலைமையில் இடம் பெறும். (86)

# வெளிநாட்டு டாக்டர்களால் 'மனிதப் பரிசோதனையாம்'!

### சுகாதார அமைச்சுக்குப் புகார்

(கொழும்பு)

கொழும்புக்குவெளியேயுள்ள ஆஸ்பத்திரிகளில் அண்மையில் அரசினால் நியமிக்கப்பட்ட வெளிநாட்டு டாக்டர்களால் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சாதாரண நோயாளர் மீது இவர்கள் 'மனித பரிசோதனை' செய்வதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வெளிநாட்டு டாக்டர்களின் வைத்தியத்தின் தரம் குறைவாகக்காணப்படுவதால் இவர்கள் மருத்துவ ஆலோசனை வழங்கக் கூடத் தகுதியற்றவர்கள் என்று உள்ளூர் டாக்டர்கள் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

இதேவேளை, அரச மருத்துவர் சங்கச் செயலாளர் சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் ஜோ. பெர்னான்டோவுக்கு எழுதியுள்ள கடிதத்தில், வெளியூர் டாக்டர்களை, அவர்கள் சேவை தேவைப்படும் ஆஸ்பத்திரிகளுக்கு இடமாற்றம் செய்யும்படி கேட்டுள்ளார்.

வெளிநாட்டு டாக்டர்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு நியமிக்கப்பட்ட பிறகு ஆஸ்பத்திரியில் நிர்வாக சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும், டாக்டர்களின் அன்றாடக் கடமைகளில் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் அனுராதபுர ஆஸ்பத்திரி நிர்வாகம் குற்றம் சாட்டியுள்ளது.

## பேராதனை மாணவர்கள் பலருக்கு மனநோய் பாதிப்பு

### பிரதம வைத்திய அதிகாரி தகவல்

(கண்டி)

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மனநோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வருடம் 123 மாணவர்கள் மனநோய்க்கு வளாக மருத்துவ மையத்தில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

பேராதனைப் பல்கலைக் கழக பிரதம வைத்திய அதிகாரி டாக்டர்(திருமதி)பி. அமரசிறி கண்டியில் கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போது இதனைத் தெரிவித்தார்.

நிதி நெருக்கடி, ஆங்கிலம் தெரியாமை, குடும்பச் சூழ்நிலை, ராக்கிங் மற்றும் கிராமப்புற மாணவர்களுக்கு பல்கலைக் கழகத்தில் ஏற்படும் பொருத்தப்பாடின்மை, சமூக இடைவெளி ஆகியன மன நோய்க்கான காரணங்கள் என்றார் அவர்.

பெண்களை விட அதிமான ஆண்கள் மனநோயால் பீடிக்கப் படுவதாகக் கூறும் அவர், கடந்த வருடம் ராக்கிங் காரணமாக மனநோய் ஏற்பட்ட எட்டுப்பேர் வளாக மருத்துவ மனையில் உளவளத் துணையை நாடியதாகத் தெரிவித்தார்.

## மருத்துவக்கல்லூரி மாணவர் சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

இலங்கை மருத்துவர்கள் சங்கம் மேற்கத்திய மருத்துவர்கள், சுதேசிய மருத்துவக் கல்லூரியில் விரிவுரைகள் நிகழ்த்தக் கூடாது என்று தடைவிதித்ததை எதிர்த்து சுதேசிய மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கூரையில் ஏறி இருந்து தமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகிறார்கள்

சுமார் இருபத்தைந்து மாணவர்கள் இந்த எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளார்கள். அதே வேளை விரிவுரைகள் வழமை போல் நடைபெறுகின்றன. விரிவுரைகளைப் பகிஷ்கரிப்பதன் மூலம் கல்லூரியை மூடுவது தமது நோக்கமல்ல என்று மாணவர் ஒன்றியப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## திருமலைசென்ற அதிகாரிகள் யாழ். திரும்பமுடியா நிலை

[கொழும்பு]

யாழ். அரச அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் கடமை காரணமாக மாகாண அமைச்சுக்குச் சென்ற பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் யாழ்ப்பாணம் திரும்ப முடியாமல் இருப்பதாக ஐலன்ட் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; இவர்கள் சர்வதேச செஞ்சிலுவைக் குழுக் கப்பல் மூலம் திருக்கோணமலை மாகாண அமைச்சுக்குச் சென்றார்கள். மூன்று, நான்கு நாட்கள் திருக்கோணமலையில் தமது உத்தியோகக் கடமைகளை முடித்துக்கொண்டு யாழ்ப்பாணம் வருவதற்காக கொழும்பு சென்றுள்ளார்கள்.

கொழும்பில் யாழ்ப்பாணம் திரும்புவதற்கான விண்ணப்பத்தை சர்வதேச செஞ்சிலுவைக் குழுவிடம் ஒப்படைத்தார்கள். அத்துடன் விண்ணப்பம் முறைப்படி அரச அதிபரால் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. விண்ணப்பத்தை ஒட்டுமொத்தமாக சர்வதேச செஞ்சிலுவைக் குழு நிராகரித்ததால் தாங்கள்கடந்த மூன்று நான்கு மாதங்களாக யாழ்ப்பாணம் வரமுடியாமல் கொழும்பில் நிற்பதாகத் தெரிவிக்கிறார்கள்.

## கண்டியில் எயிட்ஸ் நோயாளி

[கொழும்பு]

கண்டி மாவட்டத்தில் மற்றுமொரு எயிட்ஸ் நோயாளி கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். இவர் பெண் ஆவார். கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள இவர் மத்தியகிழக்கு நாடு ஒன்றில் பணிபுரிந்தவர் எனக் கூறப்படுகின்றது.

இலங்கை முழுவதும் 34 எயிட்ஸ் நோயாளிகள் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தினமும் 3000 பெண்கள் பாதிப்பு

உலகில் தினமும் மூவாயிரம் பெண்கள் எயிட்ஸ் நோய்த் தொற்றுக்கு உள்ளாவதாக ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தினமும் ஐம்பதாயிரம் குழந்தைகளும் நோய் வாய்ப்பட்டு பிறப்பதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

## மூளை மலேரியா பரவுகிறது

பச்சிலைப்பள்ளி பகுதிகளில் மூளை மலேரியா என்னும் நோய் வேகமாக பரவி வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பளை அரசினர் வைத்தியசாலையில் நாள் ஒன்றுக்கு 40 பேர் வரையில் சிகிச்சைக்கு வருவதை காணமுடிகிறது. (86)

## நிக் பதவி ஏற்றார்

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றிய பிரெஞ் வைத்தியக் குழுவின் நிபுணரான டாக்டர் திரு. அபெல் கடந்த 8ஆம் திகதி இங்கிருந்து பயணமானார். இவரது இடத்திற்கு புதிய நிபுணராக, திரு. நிக் என்பவர் பதவியேற்றுள்ளார். (30)

## சேமிப்பு புத்தகம் வழங்கல்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் மரம் நடுகைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள வடமராட்சிக்கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த 212 மாணவர்களுக்கு சேமிப்பு புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரியில் வடமராட்சி கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. (25)

## போட்டியில் முதலிடம்

பண்ணிசைப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த வி. ஜீவிக்காபாலர் பிரிவிலும், சிரேஷ்ட இடைநிலைப் போட்டியில் ந. றஞ்சனாவும் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

உடற்பயிற்சிப் போட்டியிலும் இப்பாடசாலை கொத்தணி, கோட்ட மட்டங்களில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

## உள்ளூர்தபால் கட்டணம் மாற்றமில்லை

[யாழ்ப்பாணம்]

உள்நாட்டுத் தபால் கட்டணத்தில்

## ஜோர்ஜியா மீதான

மேலும், சிறிலங்கா ஜனாதிபதிக்கு பாராளு மன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றின் மூலம் தமது பலத்தை அளவிட முனைவது சில வேளை அரசியல் தற்கொலையாக அமைந்துவிடக்கூடும். ஆகையால், தமது ஆட்சியையோ அதிகாரத்தையோ எந்த வகையிலும் பாதிக்காத வகையில் மாகாணசபைத் தேர்தலின் மூலம் ஒரு பரீட்சார்த்த முயற்சியை மேற்கொள்வதென்பது திரு. பிரேமதாசாவைப் பொறுத்து மிகவும் பாதுகாப்பானதும், பாதிப்பு இல்லாததும் ஆகும்.

இதே வேளை, மாகாணசபைத் தேர்தலைப் பிற்போடுவதும் ஆபத்தானதொன்றாக அமைந்துவிடக்கூடிய சூழ்நிலையும் தென்னிலங்கை அரசியலில் உருவாகக்கூடிய நிலையும் உண்டு. கடந்த வருடத்தில், சீர்செய்யமுடியாதது எனக் கருதப்பட்ட எதிர்க்கட்சிகளுக்கு இடையிலான உறவும், தலைமைத்துவப் போட்டியும், எதிர்பாராதவிதத்தில் கடந்த வாரங்களில் ஓரளவேனும் சீர்செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கம், தேர்தலுக்கான ஒரு பஜெட்டைத் தயார் செய்ததில் இருந்து எதிர்க்கட்சிகள் ஓரளவிற்கேனும் தமக்குள் இருந்த முரண்பாடுகளைக் களைந்து கூட்டு முன்னணியை அமைத்துள்ளன. இதுதொடர்பாக பிரதான எதிர்க்கட்சிக்குள் கருத்துமோதல்கள் இருப்பினும் கூட்டு முன்னணி உருவாகிவிட்டது என்பது எதிர்க்கட்சிகள் ஓரளவிற்கேனும் தம்மைத் தயார்படுத்திக்கொண்டுள்ளன என்பதையே காட்டுவதாகவுள்ளது.

மேலும், ஐக்கியதேசியக்கட்சியில் இருந்து பிரிந்து சென்ற லலித் - காமினி குழுவினருக்கிடையில் ஏற்பட்ட தலைமைத்துவப் போட்டியும் அவர்களினால் ஓரளவு வெற்றிகரமாகத் தீர்த்துவைக்கப்பட்டுள்ளது என்றே கூறலாம். அத்தோடு, இக்கட்சியினர் எதிர்க்கட்சிக் கூட்டணியுடன் உடன்பாடு கொள்வதுபற்றி பரிசீலித்து வருவதாகவும் தெரிகிறது.

இந்நிலையில் திரு. பிரேமதாசா எதிர்க்கட்சிகளின் புதிய கூட்டுபலம்பெற்று அரசியல் சக்தியாகத் திரட்சி அடையும் முன்னர் அவர்களைத் தேர்தலில் தோற்கடிக்கவும், தான் பலமான நிலையில் உள்ளதாக உலகிற்கு வெளிப்படுத்துவதற்காகவும் இந்த மாகாண சபைத் தேர்தலை பயன்படுத்த முற்படுவதில் வியப்பொன்றும் இல்லை. இதே வேளை, இத்தேர்தலின் முடிவு திரு. பிரேமதாசாவின் அரசியல் எதிர்காலத்தை கட்டியம் கூறும் ஒன்றாகவும், பாராளுமன்ற - ஜனாதிபதி தேர்தல் குறித்த அறிவிப்புக்களையும் தீர்மானிக்கும் ஒன்றாக அமையும் எனக் கூறுவதிலும் தவறில்லை.

சாமி தலைமையில் இடம் பெறும். (86)

செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி இம்மாதம் 16-ம் திகதி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் திரு. எஸ். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. (30)

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி வித்தியாலய அதிபர் திரு. க. பொன்னையா தலைமையில் 24ஆம் திகதி நடைபெறும்.

வசாவிளான் யா/குட்டியப்புலம் அ. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு—1993 போட்டி இன்று பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தின் 'இல்ல மெய்வல்லுனர் போட்டி' நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும். (22)

வரணி கரம்பைக் குறிச்சி அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுனர் போட்டி' இன்று நடைபெறும்.

நவாலி மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று திரு. ஐ. மனோகரன்கொத்தணிஅதிபர் தலைமையில் நடைபெற உள்ளது. பிரதம விருந்தினராக கோட்டக்கல்வி பிரதிப்பணிப்பாளர் திரு.மு. சிவானந்தன் அவர்கள் கலந்து கொள்கின்றார். (07)

# அககாஷிய புரடசி அரசின விமானத் தாக்குதல் தீவிரம்

## ரஷ்ய ஜெட் விமானங்கள் பங்கு

[மொஸ்கோ]

முன்னாள் சோவியத் யூனியனின் ஜோர்ஜியா மாநிலத்திலிருந்துபிரிந்துசென்றதாகஅறிவித்துள்ள அக்காஷியபுரட்சிஅரசு ஜோர்ஜியா மீதான விமானத் தாக்குதலை நேற்று இரண்டாவது நாளாகவும் நடத்தியது

அக்காஷிய புரட்சி அரசின் விமானங்கள் ஜோர்ஜியா தலைநகர் சுகுமியை கடுமையாக தாக்கியதில் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்களும் ஜோர்ஜியாப் படைகளும் பலியாகியுள்ளனர். அக்காஷியாவின் விமானத்தாக்குதலுக்கும் தரைவழித் தாக்குதலுக்கும் ரஷ்ய இராணுவமே உதவுவதாக ஜோர்ஜியா ஜனாதிபதி எட்வேட் செவர்நாட்சே குற்றஞ்சாட்டினார். இதைரஷ்யா மறுத்துள்ளது

எனினும் இந்த விமானங்களை செலுத்தும் விமானிகள் ரஷ்யர்களே என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. திங்களன்று நடைபெற்ற விமானத்தாக்குதலில் பங்குபற்றிய விமானங்கள் ரஷ்யாவின் எப். யூ-25ரக ஜெட் போர் விமானங்கள் எனவும் இவை அக்காஷியாவிலுள்ள தற்போது ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலுள்ள விமான தளத்திலிருந்தே வந்தவை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜோர்ஜியா மாநிலத்திலிருந்து அக்காஷியா பகுதியை புரட்சியாளர்கள் தனிநாடாக பிரகடனப்படுத்தி அங்கு புரட்சி அரசு ஒன்றை அமைத்ததையடுத்து ஜோர்ஜியா பாதுகாப்புப் படைகளுக்கும் அக்காஷிய புரட்சியாளர்களுக்குமிடையே கடும் மோதல்கள் இடம்பெற்று வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. அக்காஷிய புரட்சியாளர்களுக்கு ரஷ்ய படைகள் உதவியளித்து வருகின்றன. ஜோர்ஜியாஜனாதிபதி செவர்நாட்சே முன்னாள் சோவியத்யூனியன்ஜனாதிபதி கொர்பசேவ் அரசில் வெளிநாட்டமைச்சராக இருந்தமை தெரிந்ததே.

## விசாரிக்கப்படும்

(டில்லி)

பம்பாய் குண்டுவெடிப்பு சம்பவங்களை அடுத்து அமெரிக்க மக்களை இந்தியாவிற்கு விஜயம் செய்ய வேண்டாமென அமெரிக்க நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளதா என்பது பற்றி இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் உறுதி செய்யப்பட இருப்பதாக உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

# மசூதி உடைப்பிற்கு காங்கிரஸே காரணம்

(சென்னை)

அயோத்தியாவில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட சம்பவத்திற்கு காங்கிரஸ் கட்சியே பொறுப்பு என்று அ. இ. அ. தி. மு. கவினர் நேற்றுப் பிற்பகல் தமிழக சட்டப் பேரவையில் தெரிவித்ததையடுத்து கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது.

இதனை அடுத்து சட்டப் பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்த காங்கிரஸ் கட்சியினர் சட்டப் பேரவை வளாகத்தில் கூடி பாரதீய ஜனதாக் கட்சியின் கைக் கூலியான அ. இ. அ. தி. மு. க. அரசு ஒழிக என்று உரத்துக் கோஷம் எழுப்பினர்.

## தமிழக எதிர்கட்சி தலைவர் கண்டனம்

# மைக் செயற்பாட்டினை சபாநாயகர் நிறுத்துகின்றார்

தமிழக சட்டப் பேரவையில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை பேசவிடாது ஆளும் அ. தி. மு. கவினரும் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையாவும் தடுத்துவருவதாக எதிர்க்கட்சி காங்கிரஸ் தலைவர் எஸ் ஆர். பாலசுப்பிரமணியம் நேற்றுக் கண்டனம் தெரிவித்தார்.

பேச எழுந்தவுடனேயே ஆளும்கட்சியினர் கூச்சலிடுகின்றனர். சபாநாயகர் மைக்கின் செயற்பாட்டை நிறுத்துகின்றார். சபாநாயகர் சபை விவாதங்களில் கலந்துகொள்ளக் கூடாது. ஆனால் தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் விவாதத்தில் கலந்துகொள்கின்றார் என்று அவர் கூறினார்.

இதுகுறித்து அகில இந்திய காங்கிரஸ் தலைமைகமிட்டிக்கு அறிவிக்கப்படும் எனவும் பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

உள்நாட்டுத் தபால் கட்டணத்தில் எதுவித மாற்றமும் இல்லை என வட மாகாண பிரதம தபால் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

உள்நாட்டு சாதாரண தபால்களுக்கு ஒரு ரூபா பெறுமதியானமுத்திரை ஒட்டினால் போதுமானதுஎன அவர் தெரிவித்தார்.

## வேதாகம போட்டி

யாழ். மறைக்கல்விநிலையத்தினால் 1993 ஆம் ஆண்டிற்கான மறைவட்ட வேதாகம கட்டுரை, பேச்சுப்போட்டிகள் நடாத்தப்பட உள்ளதாகவும் இப் போட்டிகளில் கலந்து கொள்ள உள்ளவர்கள் யாழ். மறைக்கல்வி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறுயாழ் மறைக்கல்வி இயக்குனர்அருட் திரு. ஆர். எச். சகாயநாயகம் அடிகளார் தெரிவித்துள்ளார். (17)

## பொதுக்கூட்டம்

காரைநகர் கிராமியக் கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்புக்களினதும், கூட்டுறவுச் சங்கங்களினதும் ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை காலை பத்து மணியளவில் தொல்புரம் மேற்கு பேபிசாளி வீதியிலுள்ள ஒன்றியக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. (41)

## பிரியாவிடை வைபவம்

கிளிநொச்சி நாகேந்திரா வித்தியாலயத்தில் மூன்று ஆண்டுகளாகத்தொண்டர் ஆசிரியர்களாகச் சேவையாற்றி 1-9-1992-ல் நிரந்தர நியமனம் பெற்ற ஆசிரியர்களின் ஒன்று கூடலும் இப்பாடசாலையில் ஆசிரியர்களாகக் கடமையாற்றி மாற்றலாகி வேறு பாடசாலைகளுக்குச் சென்றவர்களுக்கான பிரியாவிடை வைபவமும் அண்மையில் வித்தியாலய அதிபர் திரு. ப. தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

ஈழநாதம்

# மக்களின் நன்மைக்காக மாணவர் போராட வேண்டும்

## - கரிகாலன்

(யாழ்ப்பாணம்)

உலகளாவிய ரீதியில் பல்கலைக்கழக மாணவர்களின் குரல் மிளிரக்கூடியது. அனைத்து சக்திகளையும் ஒன்று திரட்டி மக்களின் எதிர்கால நன்மைகளுக்காகப் பாடுபட பல்கலைக்கழக மாணவர்களாகிய நீங்கள் ஒன்று திரளவேண்டும். இதன்மூலம்தான் நமது தமிழீழ மக்கள் படும் துன்பங்கள் துயரங்கள் எதிர்காலத்திலாவதுகளையப்படும். எனவே மாணவர்சக்தி மாபெரும் சக்தி என உலகுக்குக் காட்ட முன் வாருங்கள் என தமிழீழ உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம்பல்கலைக்கழகமறுமலர்ச்சிக்கழகத்தின் 13-ஆண்டு நிறைவுநாள் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய கரிகாலன் மேலும் கூறுகையில்,

சர்வதேச ரீதியில் நமது மக்கள் அன்றுதொட்டு இன்று வரை படும் துயரங்களை, தாக்கங்களை எடுத்துக்கூற மாணவ சக்திகளே இன்றைய காலகட்டத்தில் முன்வரவேண்டும். உயர்படிப்பை முடித்துவெளியேறி வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவர்கள் சக்தி இதனைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்றார்.

மேலும் யாழ். பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள்வருவார்கள்போவார்கள். ஆனால் கடந்தகால வரலாறுகளை எழுத்துருவில் பதிக்க எந்த ஒரு மாணவரும் முன்வருவதாகத் தெரியவில்லை என்றார்.

## நேற்று சிறப்புற நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ். கல்வித் திணைக்களத்தினால் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிநேற்று பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது

இறுதிப் போட்டியில் 36 பாடசாலைகள் கலந்துகொண்டன. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கலந்து கொண்டார். தமிழீழ தேசியக் கொடியை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் ஏற்றிவைத்தார். இதில் வெற்றி பெற்ற பாடசாலைகளுக்குப் பரிசில்களை திருமதி தேவராணி சுந்தரலிங்கம் வழங்கினார். ஆயிரக் கணக்கான பார்வையாளர்கள் கண்டு களித்தனர்.

பரிசில் பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு:

15 வயதுக்கு உட்பட்ட ஆண்கள்: முதலாமிடம் கோப்பாய் நாவலர் வித்தியாலயம், இரண்டாமிடம் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், மூன்றாமிடம் புனித ஹென்றியரசர் கல்லூரி.

15 வயதுக்கு உட்பட்ட பெண்கள்: முதலாமிடம் வேம்படி மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் உடுவில் மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

17 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் முதலாமிடம் வைத்தீஸ்வர கல்லூரி, இரண்டாம் இடம் புனித ஹென்றியரசர் கல்லூரி, மூன்றாமிடம் ஊர்காவற்துறை கொத்தணி.

17 வயதுக்கு உட்பட்ட பெண்கள்: முதலாமிடம் வேம்படி மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் உடுவில் மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

19 வயதுக்கு உட்பட்ட

## நாளை மருதனார்மடத்தில் சேமிப்புப் புத்தகம் வழங்கல்

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் யாழ் மாவட்டத்திலுள்ளபாடசாலைகள், பாடசாலை மாணவர்கள் அடங்கிய மரநடுகைத் திட்டமொன்றைத்தொடர்ச்சியாக மூன்று ஆண்டு காலங்களுக்கு நடைமுறைப்படுத்தி வருகின்றது. இத்திட்டம் கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகும். இதன் இரண்டாம் கட்ட நடவடிக்கையாகவுள்ள சேமிப்புப் புத்தகம் வழங்கல் நடவடிக்கையில் மருதனார்மடம் கோட்டத்தில் உள்ள இத்திட்டத்தில் பங்குபற்றும் அனைத்து மாணவர்களுக்கும் சேமிப்புப் புத்தகம் வழங்கும்நிகழ்ச்சி நாளை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக வலிகாமம் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திருக்குமரன் அவர்கள் கலந்துகொள்ளவுள்ளார் என தமிழர் புனர்வாழ் கழகத்தின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

## வதிவிட வேளாண்மை போட்டி மதிப்பீடு

வதிவிட வேளாண்மைப் போட்டியிலே கலந்துகொள்வோரது இல்லங்களுக்கு மதிப்பீட்டுக் குழுவினர் சென்றுபார்வையிட்டு செயல்திறமையை மதிப்பீடுசெய்து புள்ளிகள் வழங்கவுள்ளதாக யாழ் மாவட்டத் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் அறிவித்துள்ளது.

இதற்கான புள்ளி வழங்கும் நடவடிக்கை இன்று தொடக்கம் 25-ம் திகதிவரை மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாடக விழா

## மாவீரர் வீரவணக்கக் கூட்டம்

மூன்றாம் மாதம் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 7.30 மணிக்கு கோப்பாய் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்

★

(தென்மராட்சி)

கைதடி வட்டவைப் பிரிவில் மூன்றாம்மாதத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் அஞ்சலிக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு கைதடி சந்தியில் உள்ள மாவீரரின் நினைவுப் பந்தலில் நடைபெறவுள்ளது. (86)

## காணாமற்போன வர்த்தகர் பிணமாக மீட்பு

(வவுனியா)

ஒரு தொகைப் பணத்துடன் காணாமற் போனதாகத் தேடப்பட்ட வர்த்தகர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது; வவுனியா மாவட்டத்தின் சேம மடுப் பகுதியின் மதுரங்குளம் கிராமத்தைச் சேர்ந்த விஷ்வலிங்கம் இராசரத்தினம் என்பவர் வியாபார நிமிர்த்தமாக 16,000 ரூபா பணத்துடன் கடந்த மூன்றாம் திகதி காலை ஆறு முப்பது மணியளவில் கல்மடு நோக்கி சைக்கிள் வண்டியில் புறப்பட்டார். ஆனால் அதன் பின்னர் அவர் பற்றிய தகவல் ஏதும் கிடைக்காமையால் தேடப்பட்டதாகவும் கடந்த பதினைந்தாம் திகதியன்று சிதைந்த நிலையில் இவரது சடலம் கந்தசாமி நகர் பகுதியிலிருந்து மீட்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

# அராலி இளைஞர் கோரக் கொலை

(யாழ்ப்பாணம்)

இளைஞர் ஒருவரை ஏழு பேர் இணைந்து ஈவிரக்கமின்றி வெட்டியும் அடித்தும் கோரமாக கொலை செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு அராலி வடக்குப் பகுதியில் நடைபெற்ற மேற்படி சம்பவத்தில் கணேஸ் கருணாகரன் (வயது 24) என்ற இளைஞனே இவ்வாறு கோரமாகக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவதினம் சுமார் 7பேர் கொண்ட குழுவினர் இவரது வீட்டுக்கு வந்து இவரை வீட்டுக்கு வெளியே அழைத்துச் சென்று திடீரென அலவாங்கு கோடரி, வாச்சி போன்றவற்றால் வெட்டியும் அடித்தும் காயப்படுத்தினர்

இவ் இளைஞனின் தலையில் மட்டும் சுமார் ஒன்பது வெட்டுக் காயங்கள் ஏற்பட்டன.

இவர் யாழ். போதனா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார் எனினும் இவரது உயிரைக்காப்பாற்ற

இச்சம்பவத்தின்போது இவரைத் தாக்கியவர்களைத் தடுக்கச் சென்ற இவரது தாயாரும் தாக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை இச்சம்பவம் தொடர்பாக சுமார் 7 பேரை தமிழீழக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர் (சி)

## தற்கொலை

[தென்மராட்சி]

பெண்மணி ஒருவர் குடும்ப தகராறு காரணமாக அரளிக்காய் உண்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஒன்று கச்சாய் பகுதியில் கடந்த ஞாயிறு நடைபெற்றது. இச்சம்பவத்தில் மூன்று குழந்தைகளுக்கு தாயான தங்கராசா சிவனேஸ்வரி [27] என்பவரே தற்கொலை செய்து கொண்டவர் ஆவார். [86]

## கிரிக்கட்

தமிழீழத் தாயகத்தின் விடுதலைக்கான மண்மீட்புப்போர்

## பம்பாய்க் குண்டுவெடிப்பு

# ஐக்கிய அரபு எமிரேட்டிடம் இந்தியா இருவரை கோருகிறது

(டில்லி)

பம்பாய் குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக இருவர் விசாரணைக்கு தேவைப்படுவதாக இந்தியஅரசு யுனைட்டட் அரபு எமிரேட்டிடம் கோரியுள்ளது.

குண்டுவெடிப்பு சம்பவம் நிகழ்வதற்கு முன்பாக பம்பாயிலிருந்து அரபு எமிரேட்டிடம் சென்ற இரு பெண்மணிகளுக்கும் குண்டுவெடிப்பு சம்பவத்திற்கும் தொடர்புகள் இருக்கலாம் என்று கிடைத்திருக்கும் தகவல்களின் அடிப்படையில் தெரியவருவதாகவும், எனவே இந்த இரு பெண்மணிகளையும் விசாரணைக்காக இந்தியாவிற்கு திருப்பி அனுப்பும்படி அரபு எமிரேட்டிடம் கோரிக்கை விடப்பட்டிருப்பதாகவும் உள்துறை அமைச்சர் எஸ். பி சவான் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த இருவரையும் திருப்பி அழைப்பது தொடர்பாக டில்லியின் வெளிவிவகார அமைச்சு, அரபு எமிரேட் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டிருப்பதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை ஐக்கிய அரபுக் குடியரசிற்கு சட்டவிரோதமாகச் சென்ற 144 முஸ்லிம்கள் ஐக்கிய அரபுக் குடியரசு இராணுவத்தால் கைதாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவில் முஸ்லிம்களுக்கு எதிரானதாக்குதல்களிலிருந்து தப்புவதற்காகவே தாம் அங்கு சென்றதாக அம் முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர்.

## பம்பாய் குண்டுவெடிப்பு

## இந்தியாவுக்கு உதவ கனடா தயார்

(டில்லி)

அண்மைய குண்டுவெடிப்பு சம்பவங்கள் பற்றிய விசாரணையில் இந்தியாவிற்கு உதவ கனடா முன்வந்துள்ளது. இந்தியாவிற்கு வந்துள்ள கனடாவின் முக்கிய அமைச்சர் ஒருவர் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், இத்தகைய கொடும் குற்றங்களை இழைத்தவர்களை கண்டு பிடிப்பதில் தமது நாடு இந்தியாவிற்கு உதவத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சூசைமேரி பாவிலு

திருமதி சூசைமேரி பாவிலு 1992-12-31 அன்று நாரந்தனையில் காலமாகி விட்டார். இவர் பாவிலுவின் அன்புமனைவியும் பிலோமினா, கிளாறா, கிறிஸ்ரினம்மா பத்திநாதர், ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆசீர்வாதம் (துறைமுக அதிகார சபை கொழும்பு) A.S அந்தோனிப்பிள்ளை) T.S அந்தோனிப்பிள்ளை, ராஜேஸ்வரியின் அன்பு மாமியாரும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ம. பாவிலு
(கணவன்)

(4498)

### திரு. இராமலிங்கம் இராமநாதன்

நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியில் வசித்துவந்தவரும், பிரபல வர்த்தகருமான திரு. இராமலிங்கம் இராமநாதன் அவர்கள் நேற்று மாலை சிவபதம் எய்தினார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

# நாடக விழா

இளவாலை ''யங்கென்றீஷியன்''
விளையாட்டுக் கழக நிதிக்காக
அரியாலை நாடக மன்றம் அளிக்கும்
சாந்தன், செல்வம் இணைந்து வழங்கும்

## அரிச்சந்திரா மயான காண்டம்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா
கல்லூரி மைதானம்
18-03-93 (இன்றிரவு) 7.30 மணி

நுழைவுச் சீட்டு: ரூபா 15/–
சிறுவர் ரூபா 5/–

மைதான வாசலில் [சி-6214]

# அறிவித்தல்

*16-03-93* செவ்வாய் ஈழநாதம் தினசரியில் வெளிவந்த சங்கத்தானையைச் சேர்ந்த திருமதி சின்னையா பவளம்மாவின் மரண அறிவித்தலில் திரு. வ. சின்னையா சங்கத்தானை இத்தியடி வீரகத்தி பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா வாக தன்னைக் குறிப்பிட்டிருந்தமை தவறாகும்.

ஷெ ஆலய பராமரிப்பு 1986ஆம் ஆண்டு தொடக்கம் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட பரிபாலன சபையால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றமையால் மேற்குறிக்கப்பட்ட வ. சின்னையா அவர்களுக்கும் இவ் ஆலயத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இவ் ஆலய அமைப்புத்திட்ட (யாப்பு) விதியிலும் தர்மகர்த்தா என்ற பதமே இல்லை. ஆகவே இவ் ஆலயத்தின் சகல பொறுப்புகளுக்கும் ஆலய பரிபாலன சபையே பொறுப்பாகுமென இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றோம்.

திரு. த. ஜெகநாதன்
செயலாளர்

இ. சண்முகலிங்கம்
தலைவர்
பரிபாலன சபை

[4506]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

லூரி, மூன்றாமிடம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் முதலாமிடம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், இரண்டாமிடம் மானிப்பாய் மெமோறியல் கல்லூரி, மூன்றாமிடம் உடுப்பிட்டி அமெரிசகமிசன் கல்லூரி

19 வயதுக்கு உட்பட்ட பெண்கள் முதலாமிடம் வேம்படி மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் உடுவில் மகளிர் கல்லூரி மூன்றாமிடம் உடுபிட்டி மகளிர் கல்லூரி.

இப்போட்டிகளின் பிரதம ஒழுங்கு காவலராக எஸ். குமாரசுவாமி, செயலாளராக த. அருணகிரிராஜா (உதவிக் கல்விப் பணிப்பாளர் உடற்பயிற்சி) ஆகியோர் பணியாற்றினர்.

## கூட்டம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோட்ட ரீதியாக கீழைத்தேய அணிநடைப் பல்லியக் குழுமங்களை உருவாக்க ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சமூக அங்கீகாரம், அவசியத்தை உணர்த்தல், பரஸ்பர புரிந்துணர்வை உண்டாக்கல் ஆகியவற்றின் பொருட்டு மேற்படி அமைப்புக் குழுவின் உபகுழுக் கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10 00 மணிக்கு யாழ்ப்பாணம் கல்வித்திணைக்கள மாநாட்டறையில் நிகழும். அதில் பங்குபற்றி ஆலோசனைகளைத் தெரிவிக்குமாறு பிரதேசக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

உள்ளூர்

எதுவும் இல்லை என்று மாநில முதல்வரும் அரசின் மூத்த அதிகாரிகளும் கூறினர்.

இச் சம்பவம் குறித்து அனைத்து தகவல்களும் திரட்டப்பட்ட பின்னர் பூரணமான அறிக்கை ஒன்று வெளியிடப் படவுள்ளது.

...எடுத்துச் செல்லப்பட்டார் எனினும் இவரது உயிரைக்காப்பாற்ற முடியவில்லை.

வங்கியாளர்

படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த வருடம் நவம்பர் மாதம் நடைபெற்ற மேற்படி பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

வீரச்சாவு

1991ஆம் ஆண்டில் நிகழ்ந்த ஆனையிறவு முகாம் தாக்குதல் நடவடிக்கையிலும் பெரும் பங்காற்றியவர். 1992 ஆம் ஆண்டில் நிகழ்ந்த கட்டைக்காடு மினிமுகாம் ஆயுதக்கிடங்கைக் கைப்பற்றிய வெற்றித் தாக்குதலில் மிகத் திறமையாகச் செயற்பட்டுத் தலைவரிடமிருந்து பரிசினையும் பெற்றவர். அதே ஆண்டில் நிகழ்ந்த கட்டுப்பொத்தை வீரவெல, கந்துறுவெல ஆகிய மூன்று முகாம்கள் மீதான தாக்குதல்களிலும், கொக்குத்தொடுவாய்க்கும்-கோட்டைக் கேணிக்கும் இடையில் நாற்பத்தாறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்ட பதுங்கித் தாக்கிய சம்பவத்திலும் இவர் முக்கிய பங்கேற்றுக் கொண்டவர்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

ஏனைய

ணணியில் அன்னிய நாடு ஒன்றின்கை சம்மந்தப்பட்டிருக்கிறது என்ற சந்தேகம் அதிகமாக உள்ளது. இக்குண்டுகளை வைத்தது உள்நாட்டவராக இருந்தாலும் இதற்கான திட்டம் வெளிநாட்டவர்களால் தீட்டப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அத்துடன் டுபாயில் இருந்து செயற்படும் தாவுத் இப்ரகீம் என்பவர் தலைமையில் உள்ள இந்திய முஸ்லிம் கும்பல் மீதும் சந்தேகம் எழுந்துள்ளது.

கிரிக்கெட்

தமிழீழத் தாயகத்தின் விடுதலைக்கான மண்மீட்புப்போர் நடந்துகொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் எமது மக்கள் அளப்பரிய தியாகங்களையும், அர்ப்பணிப்புக்களையும்புரிந்து வருகின்றனர். சிங்கள அரசின் எத்தகைய கொடிய அடக்குமுறைகளுக்கும் முகம்கொடுக்கத் திடசங்கற்பம் பூண்டுள்ளனர். கட்டுப்பாடான, ஒழுங்கான, நீதியான, உன்னதமான சமுதாயத்தின் விடிவை எதிர்நோக்கிய வண்ணமுள்ளனர். சிங்கள அரசின் இராணுவ நடவடிக்கை, பொருளாதாரத் தடை என்பவற்றிற்கு எதிராகப் பெரும்போராட்டத்தையே நடத்திக்கொண்டிருக்கின்றனர். மக்கள் இலட்சக்கணக்கில் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் இருந்தாலும் எமது தாயகத்தின் சொத்துக்களான மாணவர்களின் கல்வி, உடல்வளர்ச்சி என்பவற்றிற்காக எமது இயக்கம் பெரும்பெரும் பணிகளை புரிந்துவருவது நம் தேசம் நன்கறியும்

இந்நிலையில் யாழ். நகரப் பிரதேசத்தில் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறும்போது எவராவது வீதிகளில் வாகன போக்குவரத்துக்கோ அல்லது பொதுமக்களின் மனங்கள் புண்படக்கூடிய முறையிலோ நடந்து கொள்ள வேண்டாமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பொதுமக்கள் பலர் காவல் பணிமனைகளுக்கு வந்து புகார் செய்ததையடுத்தே இந்த வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. இம்மாதம் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறப்போகும்செல் ஜோன்ஸ்-சென்றல் கிரிக்கட் விளையாட்டுப் போட்டியை பார்வையிட வரும் மாணவர்கள், பொதுமக்கள் தமது துவிச்சக்கர வண்டிகளை பாதுகாப்பான முறையில் வைத்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பெறாமகன் குமாரசாமி

[4508]

## பொன்னம்பலம் இராசம்மா

காரைநகர் பயிரிக்கூடல் பொன்னம்பலம் இராசம்மா 17-03-93 நேற்று காலமானார். இவர் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், அன்னமுத்து, கந்தசாமி (வட-கிழக்கு மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர்) நமசிவாயம், பரமேஸ்வரி, ஆறுமுகம் (ஆசிரியர், கிளிநொச்சி), மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாலசிங்கம், மங்கையர்க்கரசி, பராசக்தி, இராமநாதன் (இளைப்பாறிய குடியேற்றத் திட்ட அலுவலர்), கனகாம்பிகை, தில்லைநாதன் (லிகிதர், வவுனிக்குளம்) ஆகியோரின் மாமியாருமாவார்

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய் இல்லத்திலிருந்து (மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்) தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
மகன்: கந்தசாமி

[4509]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 17-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8650

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
24-8364, 24-0922, 42-1494, 41-8617, 41-6296
24-2496, 42-1059, 42-3993, 26-1409, 42-0999,
26 2668, 40-1737, 24-5069, 26-8052, 24-4185,
26-2291, 26-5560.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
26-3530, 28-0882, 41-0728, 42-9625, 42-0488,
43-3576, 27-6579, 27-8515, 28-2342, 28-8589,
26-6983, 42-7312.